முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

முன்னிலை : திரு. V. பத்மநாபன், M.A. M.L., D.H.,
முதன்மை மாவட்ட நீதிபதி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ஆம் நாள், வியாழக்கிழமை.

அசல் வழக்கு எண்.31/2022
(Filing No.OS/368/2021)
(CNR No.TNPB01-001055-2021)

1. ஆரோக்கியமேரி, 74/2021,
க/பெ. லேட் பத்திநாதன்.

2. சுவக்கின் சுகானந்தம், 68/2021,
த/பெ. இஞ்ஞாசிமுத்து.

3. அகஸ்தின் அன்பானந்தன், 66/2021,
த/பெ. இஞ்ஞாசிமுத்து.

4. மகிழ்வு மார்கிரேட், 56/2021,
க/பெ. முத்துசாமி. .... வாதிகள்.

–எதிர்–

1. ஜாக்சன், 55/2021,
த/பெ. எபினேசர்.

2. மதலைமுத்து, (இறந்தார்).

3. கன்னியம்மாள், 52/2021,
க/பெ. கருப்பசாமி.

4. ஆரோக்கியசாமி, 49/2021,
த/பெ. சவரிமுத்து.

5. மாதேஸ்வரி, 47/2021,
க/பெ. அழகுவேல்.

6. கீதா, 45/2021,

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.30 18:26:05 +0530

க/பெ. ராஜ்குமார்.

7. அந்தோனி ராஜா சாலமன், 50/2021,
த/பெ. பிச்சை கிரிஸ்டோபர்.

8. லல்லிமேரி தெரஸ், 40/2021,
க/பெ. பாலமுருகேஷ்.

9. லீமாரோஸ், 45/2021,
க/பெ. அந்தோனி இருதராஜ்.

10. பீட்டர், 50/2021,
த/பெ. பிரான்சிஸ்.

11. தோமஸ், 45/2021,
த/பெ. பிரான்சிஸ். .... பிரதிவாதிகள்.

இவ்வழக்கில் வாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.G. சுப்ரமணியன், அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 3 முதல் 11 பிரதிவாதிகளை தோன்றாத் தரப்பினர்களாக பாவித்தும், 2–ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையில், வாதிகள் தரப்பில் கேட்டும், முன்னிடப்பட்ட சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

## <u>தீர்ப்புரை</u>

தாவாச் சொத்துக்களில் 1–வது வாதிக்கு 1/4–ல் =0.11 செண்டினை நல இளப்பம் சரிகட்டி, பாகம் பிரித்து, தனி அனுபவம் கிடைத்திடவும்,

2. தாவாச் சொத்துக்களில் 2–வது வாதி கிரையம் பெற்ற வகையில் அவருக்கு தனிப்பட்ட முறையில் உள்ள 1/4 –ல் பாகம் 0.11 பாகத்தினை நல இலப்பம் சரிகட்டி பாகம் பிரித்து தனி அனுபவம் கிடைத்திட வேண்டியும்,

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.30 18:26:11 +0530

3. தாவாச் சொத்துக்களில் 2 முதல் 4 வாதிகளுக்கு வாரிசுபடி உரிமையுள்ள ¼ பாகமான 0.11 செண்டினை நல இலப்பம் சரிகட்டி, பாகம் பிரித்து, தனி அனுபவம் கிடைத்திடவும் மற்றும் செலவுத்தொகை கோரியும் வாதிகள் தரப்பில் இவ்வழக்கு தாக்கல்.

2. <u>வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்</u>:

தாவாச் சொத்துக்கள் இஞ்ஞாசிமுத்து மகன் அந்தோனி சேர்வைக்கு பாத்தியப்பட்டிருந்தது. மேற்படி அந்தோனி சேர்வைக்கு தோமஸ், சந்தியாகு, இஞ்ஞாசிமுத்து, ஞானாதிக்கம் ஆகியோர்கள் வாரிசுகள். மேற்படி இஞ்ஞாசிமுத்து நீண்ட வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார். அவருடைய மகன்களான தோமஸ் மற்றும் சந்தியாகுவும் இறந்துவிட்டனர். மேற்படி தோமஸுக்கு, பிரான்சிஸ் மற்றும் குழந்தை வாரிசுகள். சந்தியாகுவிற்கு சவுரியாயி என்ற மனைவியும் ஆரோக்கியமேரி என்ற மகளும் வாரிகள். இந்த நிலையில், தாவாச் சொத்துக்களை பொறுத்து கடந்த 22.11.1980–ம் தேதியன்று தங்களுக்குள்ள பாக உரிமை பொறுத்து ஒரு பாக பத்திரம் ஏற்படுத்தி கொண்டுள்ளனர். மேற்படி பாக பத்திரத்தில் தோமஸின் வாரிசு என்ற முறையில் பிரான்சிஸ், குழந்தையும் சாந்தியாகுவின் வாரிசு என்ற முறையில் சவுரியாயியும் மற்றும் மகன்களான இஞ்ஞாசிமுத்து, ஞானாதிக்கம் ஆகியோர்கள் சேர்ந்து மேற்படி பாக பத்திரத்தினை ஏற்படுத்திக்கொண்டனர். அதன்படி பழைய சர்வே எண்.988/2, புதிய சர்வே எண்:287/2C–ல் தங்களுக்குள்ள ¼ பாகமான 0.11 செண்டினை உறுதிசெய்து மேற்படி பாக பத்திரத்தினை ஏற்படுத்திக்கொண்டனர். பாக பத்திரப்படி மேற்படி பாகஸ்தர்களுக்கு 1/4 பாகம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி சொத்தில் தங்களுக்கு எந்த பகுதியென ஒதுக்கீடு செய்து தனி அனுபவம் பெற்றுக்கொள்ளாமல் இதுநாள்வரையில் கூட்டு அனுபவமே செய்து வருகிறார்கள். மேற்படி பாக பத்திரத்தில் 1–வது வாதியின் தாயார் சவுரியாயிக்கு 'பி' அட்டவணை சொத்தில் தாவா 0.44 செண்ட் சொத்தில் பொதுவில் 0.11 செண்ட் என ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி சவுரியாயி இறந்துவிடவே அவரின் ஒரே வாரிசான 1–வது வாதிக்கு தாவா சொத்தில் 1/4–ல் பாகம் 0.11 செண்ட் பாத்தியப்பட்டு அனுபவித்து வருகிறார். இந்த வழக்கின் 2, 3, 4 வாதிகள் பாக பத்திரத்தில் கண்டுள்ள

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.30 18:26:15 +0530

இஞ்ஞாசிமுத்துவின் மகன்கள் மற்றும் மகள் ஆவார்கள். மேற்படி இஞ்ஞாசிமுத்து கடந்த 06.02.1987–ல் இறந்துவிட்டார். மேற்படி இஞ்ஞாசிமுத்துவின் மனைவியான ஜெயம் அவர்களும் கடந்த 19.04.2006–ல் இறந்துவிட்டார். ஆகையால் இஞ்ஞாசிமுத்துவிற்கு தாவா சொத்தில் உரிமையுள்ள 1/4–ல் பாகமான 0.11 செண்டிற்கு 2 முதல் 4 வாதிகள் உரிமையுடையவர்கள் ஆவார்கள். மேற்படி இஞ்ஞாசிமுத்துவிற்கும் பொதுவில் 1/4–ல் பாகம் 0.11 செண்டு என்றே மேற்படி பாக பத்திரத்தில் கண்டுள்ளது. மேற்படி பாக பத்திரத்தில் கண்டுள்ள பாகஸ்தரான ஞானாதிக்கத்தின் தாவா சொத்திலுள்ள 1/4–ல் பாகமான 0.11 செண்டினை 2–வது வாதி கடந்த 22.11.1980–ல் சரியான பிரதி பிரயோஜனத்திற்கு கிரையத்திற்கு பெற்று அனுபவித்து வருகிறார். வாதி கிரையம் பெறும் போதும் தாவா சொத்தில் 1/4 –ல் பாகமான 0.11 செண்டினை மேற்படி மொத்த சொத்தான ஏக்கர் 0.44 செண்டில் பொதுவில் 0.11 செண்ட் என கண்டு கிரையம் பெற்றுள்ளார். ஆதலால் தாவா சொத்தில் 2–வது வாதிக்கு தனிப்பட்ட முறையில் 1/4–ல் பாகம் 0.11 செண்டும் 1–வது வாதிக்கு 1/4–ல் பாகம் 0.11 செண்டும், 2 முதல் 4 வாதிகளுக்கு சேர்ந்து 1/4–ல் பாகம் 0.11 செண்டும் உரிமை உடையது ஆகும். ஆதலால் தாவா சொத்துக்கள் வாதிகளின் கூட்டு அனுபவத்திலேயே உள்ளது. இவ்வாறான சூழலில் இந்த வழக்கின் 1–வது பிரதிவாதி மேற்படி தோமஸின் வாரிசுகளான பிரான்சிஸ், குழந்தை வகையறாக்களிடம் அவர்களுக்குறிய 1/4–ல் பாகமான 0.11 செண்டுக்கு பதிலாக 0.22 செண்ட் நிலத்தினை ஒரு புகலான கிரைய பத்திரம் ஏற்படுத்திக் கொண்டு அதன் அடிப்படையில் மற்ற பிரதிவாதிகளுக்கு வீட்டுமனை போட்டு கிரைய பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாக தற்பொழுது தான் வாதிகளுக்கு தெரியவந்தது. வாதிகள் தாவா கிராமத்தில் வசிக்காததை சாதகமாகப் பயன்படுத்தி அவ்வாறு செய்துள்ளார். அவ்வாறு செய்வதற்கு 1–ம் பிரதிவாதிக்கு எந்தவித உரிமையும் கிடையாது. அதனால் மற்ற பிரதிவாதிகளுக்கு எந்தவித உரிமையும், அனுபவமும் ஏற்படாது. தாவா சொத்தில் தோமஸின் மகன்களான பிரான்சிஸ், குழந்தை ஆகியோர்களுக்கு உரிமையுடையது. மேற்படி குழந்தைக்கு வாரிசுகள் இல்லை. பிரான்சிஸ் இறந்து விட்டதால் அவருடைய வாரிசுகள் 10 மற்றும் 11 பிரதிவாதிகள் வாரிசுகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். ஆகையால்

மேற்படி 1–வது பிரதிவாதி ஏற்படுத்தி கொண்டுள்ள கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேற்படி கிரைய பத்திரத்தில் கண்டுள்ளபடிக்கு 0.22 செண்டிற்கு எந்தவித உரிமையும், அனுபவமும் ஏற்படாது. மேற்படி பிரன்சிஸ், குழந்தை ஆகியோர்கள் உயிருடன் இல்லை மேற்படி விசயங்கள் வாதிகளுக்கு தெரியவந்தவுடன் வாதிகள் கடந்த 01.08.2020–ம் தேதியன்று தங்களுக்கு 1–வது வாதியின் 1/4–ல் பாகம் 0.11 செண்டினையும், 2–வது வாதி கிரையம் பெற்ற 1/4–ல் பாகம் 0.11 செண்டினையும், 2 முதல் 4 வாதிகளுக்குள்ள 1/4–ல் பாகம் 0.11 செண்டினையும் பிரித்து தரவேண்டி பிரதிவாதிகளிடம் கேட்டபோது அதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர். எனவே, வழக்கு.

3. 1 மற்றும் 3 முதல் 11 பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர்களாக கருதி ஒருதலைபட்சமாக வைக்கப்பட்டுள்ளனர்.

4. வாதிகள் தரப்பில் 2ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் முடிவு காண வேண்டிய பிரச்சினை என்னவெனில் வாதிகளுக்கு வழக்கில் கோரியுள்ளபடி பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

6. தீர்வு :

வழக்கானது பிராது தபசில் சொத்துக்களை பொறுத்து நல இளப்பம் சரிகட்டி, பாகம் பிரித்து, அதில் 1–வது வாதியின் 1/4–ல் பாகம் 0.11 செண்டினையும், 2–வது வாதி கிரையம் பெற்ற 1/4–ல் பாகம் 0.11 செண்டினையும், 2 முதல் 4 வாதிகளுக்குள்ள 1/4–ல் பாகம் 0.11 செண்டினையும் பிரித்து தரக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் 2ம் வாதியான வா.சா.1 தனது சாட்சியத்தில், பிராது தபசில் சொத்துக்கள் ஆதியில் தாவாச் சொத்துக்கள் இஞ்ஞாசிமுத்து மகன் அந்தோனி சேர்வைக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றும், மேற்படி அந்தோனி சேர்வைக்கு தோமஸ், சந்தியாகு, இஞ்ஞாசிமுத்து, ஞானாதிக்கம் ஆகியோர்கள் வாரிசுகள் என்றும், இஞ்ஞாசிமுத்து

நீண்ட வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார் என்றும், அவருடைய மகன்களான தோமஸ் மற்றும் சந்தியாகுவும் இறந்துவிட்டனர் என்றும், மேற்படி தோமஸுக்கு, பிரான்சிஸ் மற்றும் குழந்தை வாரிசுகள் என்றும், சந்தியாகுவிற்கு சவுரியாயி என்ற மனைவியும் ஆரோக்கியமேரி என்ற மகளும் வாரிகள் என்றும், தோமஸின் வாரிசு என்ற முறையில் பிரான்சிஸ், குழந்தையும், சந்தியாகுவின் வாரிசு என்ற முறையில் சவுரியாயும் மற்றும் மகன்களான இஞ்ஞாசிமுத்து, ஞானாதிக்கம் ஆகியோர்கள் சேர்ந்து 22.11.1980–ம் தேதியன்று பாக பத்திரத்தினை ஏற்படுத்தி, கூட்டு அனுபவமாக செய்து வந்ததாகவும் கூறி வா.சா.ஆ 1 வம்சாவளி பட்டியல், வா.சா.ஆ 3 வா.சா.1ன் தந்தை இஞ்ஞாசிமுத்துவின் இறப்புச் சான்றிதழ், வா.சா.ஆ 4 வா.சா.1ன் தாயார் ஜெயத்தின் இறப்புச் சான்றிதழ், வா.சா.ஆ 5 இஞ்ஞாசிமுத்துவின் வாரிசு சான்றிதழ் மற்றும் 22.11.1980 ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் நகல் வா.சா.ஆ 2 ஆகவும், வா.சா.1, ஞானாதிக்கத்திடமிருந்து அவருடைய பாகச் சொத்தை 22.11.1980 ஆம் தேதி கிரையம் பெற்ற கிரையப் பத்திரத்தின் நகல் வா.சா.ஆ 6 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். 1வது பிரதிவாதி, தோமஸின் வாரிசுகளான பிரான்சிஸ் மற்றும் குழந்தை ஆகியோரிடமிருந்து தாவாச் சொத்துக்களில் அவர்களுடைய பாகமான 0.11 செண்டுக்கு பதிலாக 0.22 செண்ட்டை கிரையம் பெற்று மற்ற பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளதாக கூறி வா.சா.ஆ 7 கணினி பட்டா தாக்கல் செய்துள்ளார். வா.சா.1ன் கிரையதாரரான ஞானாதிக்கத்தின் மகனான வா.சா.2 அளித்துள்ள சாட்சியத்தில், தனது தந்தை 2 ஆம் வாதிக்கு பொதுவில் 0.11 செண்டை 22.11.1980ல் கிரையம் கொடுத்துவிட்டதாகவும், மேற்படி சொத்துக்கள் யாவும் பொதுவாக அனுபவம் செய்யப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

7. வா.சா.1 ன் சாட்சியம் மற்றும் அவர் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் உள்ளடக்கத்தையும் மற்றும் வா.சா.2ன் சாட்சியத்தையும் ஒருசேர ஒருங்கிணைத்து பரிசீலனை செய்து பார்கும்போது, தாவாச் சொத்துக்களில் 2–வது வாதி கிரையம் பெற்ற வகையில் பொதுவில் 0.11 செண்டு பாகம் உள்ளது என்று தெளிவாக அறியமுடிகிறது. மேலும், வா.சா.1 தன்னுடைய சாட்சியத்தில், தாவாச் சொத்துக்களில் 1–வது வாதிக்கு பொதுவில் 0.11 செண்டும், 2 முதல் 4 வாதிகளுக்கு

PADMANABAN VENKATASAMY Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.04.30 18:26:32 +0530

பொதுவில் 0.11 செண்டும் பாகம் உள்ளது என்றும், தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வருவதாகவும், தாவாச் சொத்துக்களில் 1 வது பிரதிவாதி 0.11 செண்டுக்கு பதிலாக 0.22 செண்ட்டை கிரையம் பெற்று மற்ற பிரதிவாதிகளுக்கு விற்றுவிட்டதாகவும், தாவாச் சொத்துக்களை பிரித்து தர பிரதிவாதிகளிடம் கூறியதற்கு அவர்கள் மறுத்துவிட்டதாக கூறியுள்ளார். மேற்படி வா.சா.1 ன் சாட்சியத்தை மறுத்தளிக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித சாட்சியமும் அளிக்கப்படாமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

8. வாதிகள் இறந்துபோன சந்தியாகு, இன்னாசிமுத்து ஆகியோரின் சட்டப்படியான வாரிசுகள் என்ற நிலையில் இறந்துபோன சந்தியாகு இன்னாசிமுத்து மற்றும் ஞானாதிக்கத்தின் சொத்துக்களில் பங்கு கோர உரிமையுடையவர்கள் என்றும் அவர்களது உரிமையை தங்கள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபித்துள்ளதால் வாதிகள் கோரியுள்ளபடியான பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே இவ்வழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

9. முடிவாக, இவ்வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, தாவாச் சொத்துக்களில் 1–வது வாதிக்கு 1/4–ல் 0.11 செண்டும், 2–வது வாதி கிரையம் பெற்ற வகையில் அவருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட 1/4 –ல் பாகம் 0.11 செண்டும், 2 முதல் 4 வாதிகளுக்கு வாரிசுபடி உரிமையுள்ள ¼ பாகமான 0.11 செண்டும் கிடைக்கத்தக்கது என்று வாதிகளுக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் நிர்வாக உதவியாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் ஒலி வடிவில் குறிப்பு எடுக்கப்பட்டு பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ஆம் நாள் ஆகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.30 18:26:37 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
பெரம்பலூர்.

I. வாதிகள் தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.1 | திரு. சுவக்கின் சுகானந்தம். |
| 2 | வா.சா.2 | திரு. பார்த்திபன். |

II. வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | வம்சாவழி பட்டியல். |
| 2 | வா.சா.ஆ.2 | 22.11.1980 ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் நகல். |
| 3 | வா.சா.ஆ.3 | இஞ்ஞாசிமுத்து என்பவரின் இறப்பு சான்றிதழின் நகல். |
| 4 | வா.சா.ஆ.4 | ஜெயம் என்பவரின் இறப்பு சான்றிதழின் நகல். |
| 5 | வா.சா.ஆ.5 வரிசை | இறந்துபோன இஞ்ஞாசிமுத்து மற்றும் ஜெயம் ஆகியோர்களின் வாரிசு சான்றிதழ்களின் நகல். |
| 6 | வா.சா.ஆ.6 | 22.11.1980 ஆம் தேதியிட்ட கிரையப் பத்திரம் நகல். |
| 7 | வா.சா.ஆ.7 வரிசை | கணினி வழி பட்டாக்களின் நகல் (5). |

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.04.30 18:26:42 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
பெரம்பலூர்.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
பெரம்பலூர்.

வரைவு/தெளிவு தீர்ப்புரை
அசல் வழக்கு எண்.31/2022
தேதி: 30.04.2026.